# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/14 - 2020 පෙබරවාරි මස 25 වැනි අඟහරුවාදා - 2020.02.25

*2164/14 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/UP/LND.1/UO/1/10/03.
காணி அமைச்சின் இல.: 4/3/9/2011/IR/07.

உமாஓய பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இருப்பிடங்களை இழந்தவர்களை பதிவு செய்வதன் பொருட்டு கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ஊவபரணகம பிரதேச செயலாளர் பிரிவில், தெஹிவினி பலாத கோரளையில், பஹல கொடவெர கிராம அலுவலர் பிரிவில், பஹல கொடவெர இறுதி கிராம வரைபு இல. 388, மேலதிக இல. 21 இல் பத்திர இல. 22 கொண்ட காணித் துண்டுகள் 03 இற்காகத் தயாரிக்கப்பட்ட 2019.06.26 ஆந் திகதியுடைய ஆரம்ப வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள 0.1901 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் காட்டப் பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. 843**
காணியின் பெயர் : படல்தெகேகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருவோர் : வெலிமடை, பஹல கொடவெர, கிரவணாகல்வத்தயில் வசிக்கும் திருமதி ஏ. எம். இஸாரா செவ்வந்தி மற்றும் ஆர். எம். அனுஷா தீபிகா குமாரி அவர்கள்; விஸ்தீரணம் : 0.0519 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 844**
காணியின் பெயர் : படல்தெகேகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருபவர் : வெலிமடை, பஹல கொடவெர, கிரவணாகல்வத்தயில் வசிக்கும் திருமதி டபிள்யூ. எம். மாலனி அவர்கள்; விஸ்தீரணம் : 0.0270 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 845**
காணியின் பெயர் : கன்னிலேகும்புர, படல்தெகேகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருபவர் : வெலிமடை, பஹல

1A - G 32088 - 27 (2020/02)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கொடவெர, கிரவணாகல்வத்தயில் வசிக்கும் திரு. டீ. எம். சுதுபண்டா அவர்கள்; விஸ்தீரணம் : 0.1112 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி மு.ப 9.30 மணிக்கு ஊவா பரணகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

எம். எம். கே. புஸ்பகாந்தி,
பிரதேச செயலாளர்,
ஊவா பரணகம.

பிரதேச செயலகம்,
ஊவா பரணகம,
2020, பெப்புருவரி 20.

3 - 239

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டிஎஸ்ஒ/ஹோம்/எல்ஏசி/88/11.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2014/எச்டபிள்யூ/11.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.12.07 ஆந்திகதிய 2048/38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பக்கம் 6ஏ இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் துண்டு இல. 323, 322 என திருத்தப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 322**
காணியின் பெயர் : கிரிபெனெல்லகஹலந்த, கொடபறகஹலந்த, கொறக்ககஹவத்தை, ஹத்தர அந்த ஹேன; விபரம் : தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : போமிரியகே விராஜ் பிரசன்னா, இல. 308/17/4, மாகம்மன, ஹோமாகம; விஸ்தீரணம் : 0.0019 ஹெக்டயார்.

பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2020, சனவரி 20.

3 - 366

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.